***DEPOSITION OF WITNESS***

***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***

***CC.No.28/2023 – P.W.1 (LW1)***

| | |
|---|---|
| *Name* | பிரசாந்த் |
| *Father/Husband's Name* | ராமமூர்த்தி |
| *Village* | கர்ணாவூர் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *29* |

**எதிரி 1ஆஜர். 2 முதல் 5 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 24.09.2024.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். மொபைல் கடையில் சென்னையில் வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். உறவுக்காரர்கள் தான்.

2. கடந்த 15.07.2021 ம் தேதியன்று மதியம் 12.15 மணியளவில் எங்கள் வீட்டிற்கு எதிரே உள்ள திருமங்குட்டை என்ற குளத்தில் என் அம்மாவும் என் மனைவியும் 100 நாள் வேலை செய்துக்கொண்டிருந்தனர். எனது அம்மாவும் மனைவியும் அங்கு பேசிக்கொண்டிருந்தனர். 2 வது எதிரியான சரிதா அவர்தான் ஜாடையாக பேசுவதாக நினைத்துக்கொண்டு என் அம்மாவிடமும் மனைவியிடமும் சண்டை போட்டார்கள். பிறகு சம்பவ இடத்திற்கு ராதாகிருஷ்ணன் மற்றும் மற்ற எதிரிகளும் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். 1வது எதிரி கட்டையாலும் கம்பாலும் சைக்கிள் பைப்பாலும் என் அம்மாவை அடித்தார்கள். அதை தடுக்க வந்த என் மனைவியையும் அடித்தார்கள். நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது 1, 3, 5 எதிரிகள் என்னையும் அதே மேற்கண்ட ஆயுதங்களால் தாக்கினார்கள். என் மனைவியையும் என் அம்மாவையும் எதிரிகள் குச்சிக்காரி தேவடியா அசிங்கமான வார்த்தைகளால்

திட்டினார்கள். மேலும் எங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டல் விடுத்தார்கள். எதிரிகள் தாக்கியதில் எனது வலது பக்க தலையிலும் என் அம்மாவின் வலது பக்க தலையிலும் இரத்தக்காயமும் என் மனைவிக்கு வலது பக்க கன்னத்திலும் நெற்றியிலும் இரத்தக்காயமும் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டது. பிறகு 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். அங்கு வந்த போலிசார் விசாரித்தார்கள்.

3. நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் சொல்ல போலிசார் எழுதிக்கொண்டனர். படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன். (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எங்கள் ஊரிலிருந்து மேல நாலான்நல்லூர் 45 கி.மீ இருக்கும் என்றால் - சரிதான். தேவங்குடி கிராமம் மன்னார்குடியிலிருந்து தெற்கே 10 கி.மீ இருக்கும் என்றால் - சரிதான். எங்கள் ஊரிலிருந்து 32 கி.மீ இருக்கும் என்றால் - சரிதான்.

2. போலிசார் என்னை மருத்துவமனையில் எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் - சம்பவத்தன்று மதியம் 03.30 மணிக்கு. நான் படித்துள்ளேன் என்றால் - EEE படித்துள்ளேன். கையில் கடிகாரம் அணிந்திருக்கிறேன் என்றால் - சரிதான்.

3. மருத்துவமனையில் போலிசார் என்னையும், என் அம்மாவையும், என் மனைவியையும் விசாரித்து நடந்த விவரங்களை சொல்ல சொல்ல எழுதிக்கொண்டார்கள் என்றால் - சரிதான்.

4. மன்னார்குடி மருத்துவமனையில் மருத்துவரிடம், சம்பவத்தன்று மாலை 03.55 மணிக்கு Assualted by 5 unknown persons and 2 known persons என்னை என் வீட்டில் வைத்து கம்பு, அருவாள் போன்ற ஆயுதங்களால் தாக்கியதாக கூறியுள்ளேன் என்றால் - நான் மருத்துவரிடம் சொன்னது ரட்சகன் மற்றும் மதன். 5 தெரியாத நபர்கள் யார் என்றால் - இன்று வரை எனக்கு தெரியாது. மருத்துவரிடம் அருவாளால் தாக்கியதாக சொல்லவில்லை என்றால் - சரிதான்.

5. 03.55 மணிக்கு இருவரை மட்டும் தான் எனக்கு தெரிந்திருக்கிறது என்றும் 03.30 மணிக்கு என்னால் கொடுக்கப்பட்ட புகாரில் எதிரிகளின் பெயர்கள் வருவதற்கு வாய்ப்பில்லை என்றும் நான் பொய் சொல்வதால் தான் ஒவ்வொரு தருணத்திலும் ஒவ்வொரு மாதிரி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

6. எனக்கு எதிரிகள் தாக்கியதில் எத்தனை காயங்கள் என்றால் - முதுகில் பல காயங்கள் வீங்கிய காயங்களும் வீக்கம் இல்லாத காயங்களும் கம்பியால் தாக்கிய காயங்கள் இருந்தன. முதுகில் இருந்த காயங்கள் மருத்துவரிடம் காண்பித்தேன் என்றால் - சரிதான். இரண்டு தோள்பட்டைகளிலும் எனக்கு கம்பால் அடிப்பட்டிருந்தது என்றும் வீங்கியிருந்ததை மருத்துவரிடம் காண்பித்தேன் மருத்துவர் குறிததுக்கொண்டார் என்றால்- சரிதான். நெஞ்சு, வயிறு மற்றும் மண்டையில் இரத்த காயம் இருந்தது என்றால் - சரிதான்.

7. ரட்சகனுக்கு சொந்த ஊர் மேல நானாநல்லூர் என்றால் - சரிதான். மதன் தேவங்குடி கிராமத்தை சேர்ந்தவர் என்றும் அவர் எங்கள் ஊரில் வசிப்பவர் அல்ல என்றால் - சரிதான். எனக்கு சட்டை, பேண்ட் ஆகியவற்றில் இரத்தக்கறை இருந்தது அதனை போலிசாரிடம் காண்பித்தேன் என்றால்- சரிதான்.

8. என் அப்பாவிற்கும் என் பெரியப்பாவிற்கும் சொத்து சம்மந்தமான வழக்கு நடக்கிறது என்றால் - சரிதான். என் தாத்தா, அத்தை எல்லாம் 1ம் எதிரியின் கட்சியில் இருக்கிறார்கள் என்றால் - சரிதான்.

9. நான் சொல்வதுபோன்று எவ்வித சம்பவமும் இல்லை என்றால் - சரியல்ல. என் அம்மாவிற்கு எங்கெங்கு காயம் என்றால் - தலையில். என் மனைவிக்கு கன்னத்திலும் நெற்றியிலும் காயமிருந்தது. சாட்சி நாடிமுத்து நடுத்தெருவினை சேர்ந்தவர் என்றாலும் சம்பவ இடத்திலிருந்து 1/2 கி.மீ அப்பால் உள்ளவர் என்றாலும் - சரிதான். சண்முகசுந்தரம் என்பவர் வெள்ளாளர் தெருவில் வசிக்கிறார் அவர் வசிக்கும் இடமும் என் வீட்டிலிருந்து 1/2 கி.மீ தூரம் இருக்கும் என்றாலும் - சரிதான்.

10. நான் சொல்வதுபோன்று எவ்வித சம்பவமும் இல்லை என்றும் என் அப்பாவிற்கும் பெரியப்பாவிற்கும் சொத்து சம்மந்தமான பிரச்சினை நடப்பதால் அதனை மனதில் வைத்துக்கொண்டு இந்த வழக்கு பொய்யாக உருவாக்கப்பட்டுள்ளது என்றால் - சரியல்ல. என் மனைவி ரோகிணியின் பெயரில் 100 நாள் அட்டை இல்லை என்றால் - சரிதான்.

M SURESHKARTHIK Digitally signed by M SURESHKARTHIK Date: 2024.09.24 18:04:41 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT***
***Mannargudi***
***CC.No.28/2023 – P.W.2 (LW2)***

| | |
|---|---|
| *Name* | வாசுகி |
| *Father/Husband's Name* | ராமமூர்த்தி |
| *Village* | கர்ணாவூர் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *40* |

**எதிரி 1 ஆஜர். எதிரிகள் 2 முதல் 5 ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 24.09.2024.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். எனது கணவரின் அண்ணன் மற்றும் அவரது குடும்பத்தினர்.

2. எனது வீட்டிற்கு எதிரே உள்ள திருமங்குட்டை என்ற குளத்தில் 100 நாள் வேலை செய்துக்கொண்டிருந்தோம். நானும் எனது மருமகளும் வேலை செய்த இடத்தில் பேசிக்கொண்டிருந்தோம். 2 வது எதிரி சரிதா அவரைதான் பேசுவதாக தவறாக நினைத்துக்கொண்டு தேவடியா, அவிசாரி, குச்சிக்காரி என்று திட்டினார். 2 வது எதிரி அவரது வீட்டில் சொல்லி ராதாகிருஷ்ணன், ஜெயந்தி மேலும் 2 நபர்கள் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். சம்பவ இடத்திற்கு கம்பி, மற்றும் காத்தடிக்கும் சைக்கிள் பம்ப் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு வந்து என்னை வலது பக்க தலையில் அடித்தார்கள். அதே கம்பியால் எனது மருமகளையும் மத்திசம் செய்ய வந்த என் மகனையும் அடித்தார்கள். எதிரிகள் உயிரோடு என் மகனை விடமாட்டேன் கொன்றுவிடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள். என் மகனுக்கு எதிரிகள் கம்பியால் தாக்கியதில் தலையில் உடம்பு முழுவதும் காயங்கள் ஏற்பட்டது. என் மருமகளுக்கு வலது பக்க மற்றும் இடது பக்க நெற்றியில் இரத்தக்காயம் ஏற்பட்டது. பிறகு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டுபோய் சேர்த்தார்கள். அங்கு வந்த போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. கர்ணாவூரிலிருந்து மன்னார்குடி வரும் வழியில் தான் பெருகவாழ்ந்தான் என்ற ஊர் உள்ளது என்றாலும் அங்கு தான் போலிஸ் ஸ்டேஷன் உள்ளது என்றாலும் - சரிதான். எத்தனை மணிக்கு போலிசார் வந்து விசாரித்தார்கள் என்றால் - சம்பவத்தன்று சாயந்திரம் வந்தார்கள். சம்பவம் நடந்த உடனே பெருகவாழ்ந்தான் போலிசார் கேள்விபட்டு 1/2 மணி நேரத்தில் என் வீட்டிற்கு வந்துவிட்டார்கள்.

2. வீட்டிற்கு வந்த போலிசார் என்னையும் என் மகன், என் மருமகள் ஆகியோர்களை விசாரித்து நாங்கள் சொல்ல சொல்ல எழுதிக்கொண்டு என்னிடம் கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள் என்றால் - மருத்துவமனையில் தான் கையொப்பம் வாங்கினார்கள். ராதாகிருஷ்ணன், ஜெயந்தி மற்றும் சரிதா ஆகியோர்கள் மீதுதான் போலிசாரிடம் கூறினேன் என்றால் - சரிதான்.

3. மருத்துவர் 5 தெரியாத நபர்களும் 2 தெரிந்த நபர்களும் எங்களை தாக்கியதாக தான் சொன்னேன் என்றால் - சரிதான். மருத்துவரிடம் கம்பி, காத்தடிக்கும் பம்ப் ஆகியவற்றால் தாக்கியதாக சொன்னேனா என்றால் - ஆமாம். காத்தடிக்கும் பம்ப் என்றால் 1 பக்கம் காத்தடிக்கும் பம்ப்மும் ஒரு பக்கம் ரப்பர் டியூப்மும் இருக்கும் என்றால்- சரியல்ல. இரும்பால் இருந்தது. காத்தடிக்கும் பம்பினால் என் தலையின் பின்பக்கத்தில் அடித்தார்கள் அதனால் எந்த பாகம் தலையில் பட்டது என்று தெரியாது.

4. இந்த சம்பவம் ஊரில் யார் யாருக்கு தெரியும் என்றால் - 100 நாள் வேலை செய்த 100-150 நபர்களுக்கு தெரியும். சம்பவ இடத்தில் குட்டையில் இரத்தம் ஊற்றிக்கிடந்தது என்றால் - சரிதான். என் புடவை, என் மகனின் சட்டை எல்லாம் இரத்தம் இருந்ததை போலிசார் பார்த்து வழக்கிற்கு தேவை என வாங்கிக்கொண்டார்கள் என்றால் - சரிதான். 100 நாள் வேலைக்கு தலைமை யார் என்றால் - பிரசிடெண்ட் பக்கிரிசாமி.

5. நான் சொல்வதுபோன்று ஒரு சம்பவமே இல்லை என்றும் அதனால் தான் எனக்கு வேண்டப்பட்ட நபர்களான நாடிமுத்து சண்முகசுந்தரம் ஆகியோர்கள் கண்ணுற்ற சாட்சிகளாக ஜோடித்துள்ளேன் என்றால் - சரியல்ல.

M SURESHKARTHIK

Digitally signed by M SURESHKARTHIK
Date: 2024.09.24 18:04:51 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.

## *DEPOSITION OF WITNESS*

***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***

***CC.No. 28/2023 – P.W. 3 (LW3)***

| | |
|---|---|
| *Name* | ரோகிணி |
| *Father/Husband's Name* | பிரசாந்த் |
| *Village* | கர்ணாவூர் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 25 |

**எதிரிகள் ஆஜர். இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 24.09.2024.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். எனது உறவுக்காரர்கள். அ.சா.1 மற்றும் 2 எனது கணவர் மற்றும் எனது மாமியார்.

2. 15.07.2022 ம் தேதியன்று எனது வீட்டிற்கு எதிரே உள்ள திருமங்குட்டை என்ற இடத்தில் 100 நாள் வேலை செய்துக்கொண்டிருந்தோம். நானும் என் மாமியாரும் வேலை சம்மந்தமாக பேசிக்கொண்டிருந்தோம். 2 வது எதிரியை பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம் என்று தவறான நினைத்துக்கொண்டு 2 வது எதிரியான சரிதா என் மாமியாரை குச்சிக்காரி, தேவடியா என்றும் இன்னும் கெட்ட வார்த்தைகளால் திட்டினார்.

3. 2 வது எதிரி அவரது வீட்டிற்கு போய் மற்ற அனைத்து எதிரிகளையும் அழைத்துக்கொண்டு சம்பவ இடத்திற்கு வந்து எங்களிடம் சண்டை போட்டு அவர்கள் கொண்டு வந்த இரும்பு ராடு, காத்தடிக்கும் பம்ப் மற்றும் மரக்கட்டையால் எங்களை தாக்கினார்கள். நான் கத்திய சத்தம் கேட்டு என் கணவர் வீட்டிற்குள்ளிருந்து ஓடிவந்துவிட்டார். அவரையும் எதிரிகள் தாக்கினார்கள். எதிரிகள் ஆயுதங்களுடன் நின்றுக்கொண்டிருந்ததால், அருகில் இருந்தவர்கள் யாரும் தடுக்கவில்லை.

பக்கத்து குளத்தில் வேலை செய்தவர்கள் சம்பவ இடத்திற்கு வந்து அவர்களை தடுத்து எங்களை மீட்டார்கள். எதிரிகள் தாக்கியதில் எனது கன்னத்திலும் நெற்றியிலும் காயம் ஏற்பட்டது. கண் முழுவதுமாக வீங்கிவிட்டது. என் மாமியாருக்கு வலது பக்க தலையில் தையல் போடும் அளவிற்கு இரத்தகாயமும் என் கணவருக்கு வலது பக்க தலையில் பம்பால் அடித்ததில் இரத்தக்காயமும் முதுகில் இரும்பு ராடால் அடித்ததில் காயமும் ஏற்பட்டது. எதிரிகள் அனைவரும் இன்னைக்கு நீ தப்பிச்சிட்ட ஒருநாள் இல்லைன்னா ஒருநாள் உன்னை கொலை பண்ணிடுவேன் என்று மிரட்டிவிட்டு சென்றார்கள். 108 ஆம்புலன்ஸ் மூலம் மன்னார்குடி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். அங்கு வந்த போலிசார் எங்களை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. குளத்திலிருந்து என் மாமியார் வீடு எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் - ரோட்டின் ஒருபக்கம் வீடு மற்றொரு பக்கம் குட்டை. ரோட்டின் எந்த பக்கம் என் வீடு என்றால் - மேற்கில் குட்டை கிழக்கில் என் மாமியார் வீடு.

2. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் குட்டைஎ ன்றால் - வீட்டுக்கருகில் உள்ள சந்தில். மருத்துவரிடம், எத்தனை நபர்கள் என்னை தாக்கியதாக சொன்னேன் என்றால் - 5 பேர். மருத்துவர் 5 அடையாளம் தெரியாத நபர்கள் எங்களை தாக்கியதாக சொல்லியுள்ளதாக குறிப்பிட்டிருந்தால் - அது தவறு. மருத்துவரிடம் 2 அடையாளம் தெரிந்த நபர்கள் தாக்கியதாக சொல்லியுள்ளேனா என்றால் - இல்லை.

3. மருத்துவரிடம், சைக்கிள் பம்ப், கம்பு, கம்பி ஆகியவற்றால் என்னை தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் - என்னை அடித்துவிட்டார்கள் என்று தான் சொல்லியுள்ளேன் எந்த ஆயுதம் குறித்தும் சொல்லவில்லை. போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் - மன்னார்குடி மருத்துவமனையில் சம்பவத்தன்று 04.00 மணியளவில் பார்த்தேன். போலிசாரை மருத்துவமனையில் வைத்து 04.00 மணிக்கு பார்த்தபோது எதிரிகளின் பெயர்களை சொல்லிவிட்டேன் என்றால் - சரிதான்.

4. சம்பவம் நடந்து 10 நிமிடம் கழித்து அடுத்த குட்டையில் இருந்து வந்தவர்கள் நாடிமுத்துவும் சண்முகசுந்தரமும் என்றால் - சரிதான். அந்த குட்டையின் பெயர் என்னவென்றால் - எனக்கு தெரியாது. சம்பவ இடத்திலிருந்து அந்த குட்டை 100 மீட்டர் தொலைவில் உள்ளது என்றால் - சரிதான்.

5. நான் 100 நாள் வேலை செய்வதற்கு அட்டை இல்லை என்றால் - சரிதான். 100 நாள் அட்டை இல்லாமல் 100 நாள் வேலை செய்தேன் என்று சொல்வது பொய் என்றும் என் கணவருக்காவும் என் மாமியாருக்காவும் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் - சரியல்ல.

6. இந்த சம்பவத்தில் எதிரிகள் என் மாமியாரை அடித்தார்கள், என்னை அடித்தார்கள், கேட்க வந்த என் கணவரை அடித்தார்கள் என்று தான் போலிசாரிடம் சொல்லியுள்ளேன் என்றால் - சரிதான்.

7. நான் சொல்வது போன்று சம்பவம் இல்லை என்றால் - சரியல்ல. பொய் வழக்கில் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் - சரியல்ல.

M SURESHKARTHIK

Digitally signed by M SURESHKARTHIK
Date: 2024.09.24 18:05:00 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.